بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ

**ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் 12/01/2024 அன்று U.K - இஸ்லாமாபாதிலுள்ள முபாரக் பள்ளிவாசலில் ஆற்றிய ஜுமுஆ பேருரையின் சுருக்கம்**

- **உஹுது போரின் சூழ்நிலைகள் மற்றும் சம்பவங்கள் ஆகியவற்றைப் பற்றிய குறிப்பு**
- **உலகப் போரிலிருந்து தப்பிப்பதற்கு துஆவுக்கான வலியுறுத்தல்**

أَشْهَدُ أَنْ لَّا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيْكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُوْلُهُ۔ أَمَّا بَعْدُ فَأَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ۔

بِسۡمِ اللّٰہِ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۱﴾ اَلۡحَمۡدُ لِلّٰہِ رَبِّ الۡعٰلَمِیۡنَ ﴿۲﴾ الرَّحۡمٰنِ الرَّحِیۡمِ ﴿۳﴾ مٰلِکِ یَوۡمِ الدِّیۡنِ ﴿۴﴾

اِیَّاکَ نَعۡبُدُ وَ اِیَّاکَ نَسۡتَعِیۡنُ ﴿۵﴾ اِہۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِیۡمَ ﴿۶﴾ صِرَاطَ الَّذِیۡنَ اَنۡعَمۡتَ عَلَیۡہِمۡ ۬ۙ غَیۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَیۡہِمۡ وَ لَا الضَّآلِّیۡنَ ﴿۷﴾

உஹுது போரில் பெருமானார் (ஸல்) அவர்களின் வாழ்க்கை தொடர்பாக கூறப்பட்டு வந்தது. இது தொடர்பாக மேற்கொண்டு கூறப்படும் விபரத்தில் இவ்வாறு வருகிறது; பெருமானார் (ஸல்) அவர்கள் மக்களிலேயே, எதிரிக்கு மிக அதிக நெருக்கத்தில் இருந்தார்கள். அன்னாருடன் 15 நபர்கள் உறுதியாக நின்று கொண்டிருந்தார்கள். முஹாஜிர்களில் 8 பேரும் அன்சாரிகளில் 7 பேரும் ஆவார்கள். சிலர் என்ன கூறுகிறார்கள் என்றால், பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன்னால் 30 நபர்கள் உறுதியாக நின்று கொண்டிருந்தார்கள். அவர்கள் அனைவரும், தம் முகம் அன்னாருடைய முகத்திற்கு முன்னால் இருக்க வேண்டும் என்றும், தம் உயிர் அன்னாருடைய உயிருக்கு முன்னால் இருக்க வேண்டும் என்றும், அன்னார் மீது நிம்மதி நிலவ வேண்டும் என்றும், (அன்னாருக்காக) தம் உயிர் தியாகம் ஆக வேண்டும் என்றும் கூறிக்கொண்டிருந்தனர்.

பெருமானார் (ஸல்) அவர்களுடன் உறுதியாக நின்றுகொண்டிருந்த சஹாபிகளின் எண்ணிக்கை பல்வேறு அறிவிப்புகளில் பல்வேறு விதமாக கூறப்பட்டுள்ளது. அதற்கான காரணங்களுள் ஒன்று, சஹாபிகளின் எண்ணிக்கை அந்தந்த நேரத்துக்கு ஏற்றால்போல் மாறிக்கொண்டே இருந்திருக்கலாம்! எவர் 15 நபர்களைக் கண்டாரோ அவர் 15 என்று கூறிவிட்டார். எவர் எத்தனை பேரைக் கண்டாரோ அவர் அந்த எண்ணிக்கையைக் கூறியுள்ளார். சஹாபிகள் அன்னாரைச் சுற்றி இருப்பார்கள்; பிறகு எதிரியுடைய தாக்குதலின் காரணமாக (பாதுகாப்பு) வளையம் உடைந்து விடும்; சிதறிப் போய் விடுவார்கள்; பிறகு ஒன்று கூடி விடுவார்கள். எவ்வாறிருப்பினும் விஷயம் என்னவென்றால், சஹாபிகள் உறுதியாக நிலை நிற்கும் முன்மாதிரியை வெளிப்படுத்திக் கொண்டிருந்தார்கள். மரணம் வந்துவிடுமோ என்று எவருக்கும் எவ்வித அச்சமும் இருக்கவில்லை.

ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் உஹுது நாளில் தம் சஹாபிகளின் ஒரு குழுவிடம் மரணத்திற்கான பைஅத் வாங்கியதாகவும் குறிப்பில் காணப்படுகிறது. பைஅத் செய்யும் நற்பேறு பெற்ற அந்த சஹாபிகளின் எண்ணிக்கை 8 என்று கூறப்பட்டுள்ளது. அவர்களில் எவரும் ஷஹீது ஆகவில்லை.

உஹுது நாளில் சஹாபிகள் உறுதியாக நின்றதைக் குறித்தும், அவர்களின் உயிர்த்தியாகங்களைக் குறித்தும் குறிப்பிட்டவாறு ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு கூறுகிறார்கள்:

எந்த சஹாபிகள் பெருமானார் (ஸல்) அவர்களைச் சுற்றி ஒன்று கூடி இருந்தார்களோ அவர்கள் செய்த தியாகங்களுக்கு இணையான ஒன்றை உலகம் எடுத்துக்காட்ட இயலாததாக உள்ளது. அவர்கள் விட்டில் பூச்சிகளைப் போன்று பெருமானார் (ஸல்)

அவர்களைச் சுற்றி வந்து கொண்டிருந்தார்கள். அன்னாருக்காக தம் உயிரைப் பணயம் வைத்துக் கொண்டிருந்தார்கள். எந்தத் தாக்குதல் தொடுக்கப்பட்டாலும் சஹாபிகள் தம்மேல் ஏந்திக் கொள்வார்கள். ஆனால், பெருமானார் (ஸல்) அவர்களைப் பாதுகாத்து விடுவார்கள். அத்துடன், எதிரியின் மீதும் தாக்குதல் தொடுத்து வந்தார்கள். உயிரைத் தியாகம் செய்வதற்கு ஆயத்தமாக இருந்த இந்த சில பேரால் அந்தப் பெரு வெள்ளத்துக்கு முன்னால் எப்போது வரை நிற்க முடியும்? ஒவ்வொரு கணமும் அபாயகரமான அலைகளைப் போன்று நாலாபுறமும் எதிர்ப்பு முன்னேறிக் கொண்டிருந்தது. எதிரியுடைய தாக்குதல்களின் ஒவ்வோர் அலையும் முஸ்லிம்களை எங்கிருந்து எங்கோ இழுத்துச் சென்று கொண்டிருந்தது. ஆனால் கொஞ்சம் அழுத்தம் குறையும் போதெல்லாம் முஸ்லிம்கள் சண்டையிட்டு முன்னேறி வந்து மீண்டும் தம் அன்பிற்குரிய எஜமானரைச் சுற்றி ஒன்று கூடி விடுவார்கள்.

**பொய் பேசுவதையோ அல்லது தவறாக எடுத்துரைப்பதையோ பெருமானார் (ஸல்) அவர்கள் ஆகுமானதாக ஆக்கி இருக்கிறார்கள் என்று கிறிஸ்தவர்கள் அவதூறு சுமத்துகின்றனர். அடிப்படையற்ற இந்த ஆட்சேபனைக்கு பதிலளித்தவாறு ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** ‘‘நமது தலைவரும், எஜமானரும், பரிசுத்த நபியுமான பெருமானார் (ஸல்) அவர்களின் ஓர் உயரிய முன்னுதாரணம் இந்த இடத்தில் நிரூபணமாகிறது. அது என்னவென்றால், எந்த தவ்ரியாவை (தவ்ரியா எனும் சொல்லின் அகராதி பொருள் என்னவென்றால், நாவில் ஒன்று பேசுவது; உள்ளத்தில் வேறொன்று இருப்பது. அதாவது இரு பொருளைக் கொடுக்கின்ற விஷயத்தைப் பேசுவதாகும்.) ஆகுமானதாகக் கருதிக் கொண்டு முழு வாழ்நாளும் உங்களுடைய இயேசு பயன்படுத்தி வந்தாரோ அதை விட்டு இயன்ற அளவு விலகி இருக்குமாறு பெருமானார் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள்.

தூதர்களின் தலைவராகிய (ஸல்) அவர்கள் உஹுது போரில் தனியாக இருந்த போதிலும், உருவிய வாள்களுக்கு முன்னால் ‘நான் முஹம்மது ஆவேன்; அல்லாஹ்வுடைய நபி ஆவேன்; அப்துல் முத்தலிப் உடைய பேரனாவேன்’ என்று கூறிக் கொண்டிருந்தார்கள். இன்னொரு புறமோ உங்களுடைய இயேசு (அஞ்சி) நடுங்கியவாறு தம்முடைய சீடர்களைப் பார்த்து, ‘நான் இயேசு என்பதை யாரிடமும் கூறி விடாதீர்கள்’ என்று உண்மைக்குப் புறம்பான போதனையைக் கொடுக்கிறார்கள். அவ்வாறு கூறுவதால் (ஈஸா அலை...,) அவர்களை யாரும் கொல்லப்போவதில்லை!’’

உஹுது போரில் (இஸ்லாமிய) கொடியைப் பிடித்திருந்த ஹஸ்ரத் முஸ்அப் பின் உமைர் (ரலி) அவர்கள் கொடியைப் பாதுகாப்பதன் உரிமையை நன்கு நிறைவேற்றினார்கள். **ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதுகிறார்கள்:** உஹுது போர் நாள் அன்று ஹஸ்ரத் முஸ்அப் (ரலி) அவர்கள் எந்தக் கையில் கொடியைப் பிடித்திருந்தார்களோ அந்தக் கையை இப்னு கமி(ய்)யா என்பவன் வெட்டி விட்டான். ஹஸ்ரத் முஸ்அப் அவர்கள் இன்னொரு கையில் கொடியைப் பிடித்துக் கொண்டார்கள். இப்னு கமி(ய்)யா அந்தக் கையையும் வெட்டி விட்டான். ஹஸ்ரத் முஸ்அப் (ரலி) அவர்கள் (வெட்டப்பட்ட) இரு கைகளாலும் இஸ்லாமிய கொடியைத் தம் நெஞ்சோடு அணைத்துக் கொண்டார்கள். அதற்கு பிறகு இப்னு கமிய்யா மூன்றாவது முறையாக தாக்குதல் தொடுத்தவாறு ஈட்டியை அவர்களின் நெஞ்சில் இறக்கி விட்டான். அந்த ஈட்டி உடைந்து விட்டது. ஹஸ்ரத் முஸ்அப் (ரலி) அவர்கள் கீழே விழுந்து விட்டார்கள். அப்போது இன்னொரு முஸ்லிம் முன்னால் வந்து கொடியைப் பிடித்துக் கொண்டார்.

ஆனால் ஹஸ்ரத் முஸ்அப் (ரலி) அவர்களுடைய தோற்றம், நடவடிக்கை ஆகியவை பெருமானார் (ஸல்) அவர்களோடு ஒத்திருந்ததன் காரணமாக, தான் முஹம்மது (ஸல்) அவர்களைக் கொன்று விட்டதாக இப்னு கமி(ய்)யா நினைத்துக் கொண்டான்.

அல்லது விஷமத்தனம் செய்யும் நோக்கத்திலோ அல்லது ஏமாற்றும் நோக்கத்திலோ அவன் சார்பாக இது செய்யப்பட்டிருக்கவும் சாத்தியம் உள்ளது. எவ்வாறு இருப்பினும், முஹம்மது (ஸல்) அவர்களைத் தான் கொன்று விட்டதாக அவன் கூச்சலிட ஆரம்பித்தான். இந்த செய்தியால் முஸ்லிம்களிடம் இருந்த கொஞ்ச நஞ்ச துணிச்சலும் போய்விட்டது. முஸ்லிம்களுடைய ஒற்றுமை முற்றிலும் சிதறுண்டு போய்விட்டது.

ஏற்கனவே கூறப்பட்டது போன்று, உஹுது போர்க்களத்தில் சில கணங்கள் கவனமின்மையாக இருந்ததன் காரணமாக இஸ்லாமிய படையின் வெற்றியைத் தற்காலிக தோல்வியாக மாற்றி விட்டது. பெருமானார் (ஸல்) அவர்கள் போரில் மிகச்சிறந்த தளபதியாகவும், ஞானத்துடன் உடனடியாக முடிவெடுப்பதில் எஜமானராகவும் திகழ்ந்தார்கள் என்பது உலகின் போர் வரலாற்றில் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது. போரின் நிலை மாறுவதைப் பெருமானார் (ஸல்) அவர்கள் ஆழமான கண்ணோட்டத்துடன் பார்த்தார்கள். நான்கு மடங்கு அதிக எண்ணிக்கையில் உள்ள எதிரிக்கு முன்னால் சிதறுண்டு போன, பலவீனமான தம் படையை எப்படி அவர்கள் பாதுகாத்தார்கள் என்றால், இஸ்லாமிய படையை முழுவதுமாக நசுக்கி விடுவதற்குத் தீய எண்ணம் கொண்டவாறு எதிரி செயல்பட முனைந்தான். அதில் அவன் வெற்றி பெற இயலவில்லை. ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்கள் இஸ்லாமிய படையின் கொடியை ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்களிடம் கொடுத்தார்கள்.

ஹஸ்ரத் அலீ (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களைச் சுற்றி இருந்த சில நபர்களைக் கொண்ட அந்த இஸ்லாமிய படையுடன் சேர்ந்து எந்த அளவு வீரமாக போர் புரிந்தார்கள் என்றால் முஷ்ரிக்களுடைய பெரும் திரளிலிருந்து வெளியேறுவதற்குப் பாதையை உருவாக்கி விட்டார்கள். அத்துடன், பெருமானார் (ஸல்) அவர்களுடைய ஷஹாதத்துடைய செய்தியைக் கேட்டு போர்க்களத்தில் தைரியமிழந்து, சிதறுண்டு போயிருந்த இஸ்லாமிய படையை நோக்கி முன்னேறினார்கள். மக்கத்து முஷ்ரிக்களும் இஸ்லாமிய படை மீண்டு விடக்கூடாது என்று தொடர்ச்சியாக தாக்குதல் தொடுத்துக் கொண்டிருந்தார்கள். ஆனால் பின்வாங்க வேண்டும் என்ற பெருமானார் (ஸல்) அவர்களின் ஞானம்மிகு செயல்திட்டம் எந்த அளவு வெற்றிகரமானதாக செயல்பட்டது என்றால், கையளவு இருந்த அந்த இஸ்லாமிய படை தோளோடு தோள் சேர்த்தவாறு எதிரிகளுடைய தாக்குதல்களைத் தோல்வி அடையச் செய்தவாறு அவர்கள் அறியாத வண்ணம் பள்ளத்தாக்கின் பக்கம் நழுவிக் கொண்டிருந்தது. சுற்றி வளைப்பதற்காக எதிரி முழு ஆற்றலையும் பயன்படுத்திக் கொண்டிருந்தான். ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களோ தாக்குதல் தொடுத்துக் கொண்டிருந்த பெரும் திரளைக் கிழித்தவாறு பாதையை உருவாக்கி விட்டார்கள்.

உஹுது போரில் போரிட்டுக் கொண்டிருந்த சஹாபிகளுக்கு லேசான உறக்கம், மயக்கம் தோன்றியதைப் பற்றிய குறிப்பும் காணப்படுகிறது. ஹஸ்ரத் சுபைர் பின் அவ்வாம் (ரலி) மற்றும் ஹஸ்ரத் கஅப் பின் அம்ர் அன்சாரி (ரலி) ஆகியோர் இந்த லேசான உறக்கத்தைப் பற்றி விவரிக்கும்போது, இந்த லேசான உறக்கத்தின் மூலமாக முஸ்லிம்களின் மீது இறைவன் எவ்வாறான நிம்மதியை இறக்கிக் கொண்டிருந்தான் என்று கூறியுள்ளார்கள்.

ஹஸ்ரத் அபூ தல்ஹா (ரலி) அவர்கள் கூறுகிறார்கள்: உஹுது போர் நாளில் நான் தலை உயர்த்திப் பார்த்தபோது ஒவ்வொரு நபரும் தூங்கியவாறு தம் கவசத்தின் கீழே குனிந்து கொண்டு செல்வதை நான் கண்டேன்.

முழு சமுதாயமும் ஒரே நேரத்தில் தூக்கத்தின் நிலைக்கு சென்று விட்டது; அப்போது போர் நடைபெற்றுக் கொண்டிருந்தது. எதிரியிடமிருந்து கடுமையான ஆபத்து இருந்தது! இது தற்செயலாக நிகழ்ந்த விஷயமல்ல! இது ஓர் அதிசயம் ஆக இருந்தது.

ஓர் அறிவிப்பிற்கேற்ப, ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய ஒளிமிக்க முகத்தில் உஹுது நாளில் வாள்களின் மூலமாக 70 தாக்குதல்கள் தொடுக்கப்பட்டன. ஆனால், அல்லாஹ் அன்னாரை அந்த அனைத்துத் தீங்கிலிருந்தும் காப்பாற்றினான் என்று உள்ளது.

**ஹஸ்ரத் மஸீஹ் மவ்வூது (அலை) அவர்கள் கூறுகிறார்கள்:** "பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அருகில் நின்று எவர் போர் செய்கிறாரோ அவர் அனைவரையும் விடப் பெரிய வீரராக கருதப்பட்டு வந்தார். ஏனென்றால் பெருமானார் (ஸல்) அவர்கள் மிகவும் அபாயகரமான இடங்களில் இருப்பார்கள். சுப்ஹானல்லாஹ்! அன்னாருடைய மகத்துவம் எந்த அளவு உயர்ந்ததாக இருக்கிறது! உஹுது போரில் தொடர்ச்சியாக வாள்கள் வீசப்பட்டு கொண்டிருந்தன. எப்படிப்பட்ட ஆக்ரோஷமான போர் நடந்து கொண்டிருந்தது என்றால், சஹாபிகளால் பொறுத்துக் கொள்ள இயலவில்லை. ஆனால் இந்தப் போர் வீரர் (ஸல்.... அவர்களோ) தம் நெஞ்சை நிமிர்த்திக் கொண்டு போரிட்டுக் கொண்டிருந்தார்கள். இதில் ஸஹாபிகள் மீது எந்தத் தவறும் கிடையாது. அல்லாஹ் அவர்களை மன்னித்து விட்டான். ஹஸ்ரத் ரஸூலுல்லாஹ் (ஸல்) அவர்களுடைய வீரத்தின் முன்மாதிரி வெளிப்படுத்தப்பட வேண்டும் என்பதே இதிலிருந்த இரகசியமாகும்."

*உஹுது போரின் விபரங்கள் மேற்கொண்டும் தொடர்ந்து கொண்டிருக்கும் என்று கூறிய ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் சில மர்ஹூம்களின் நற்குறிப்பை எடுத்துரைத்தவாறு ஜனாஸா ஃகாயிப் தொழ வைப்பதாக அறிவித்தார்கள். அவர்களுள் ஒருவர் பாலஸ்தீனத்தில் காஸா பகுதியைச் சேர்ந்த நம் அஹ்மதி சகோதரர் முஹம்மது உ(க்)காஷா சாஹிப் அவர்கள் ஆவார்கள். அவர்கள் மிகவும் இரக்கமற்ற முறையில் தலையில் சுடப்பட்டு ஷஹீதாக்கப்பட்டுள்ளார்கள்.*

*ஹுஸூர் (அய்யதஹுல்லாஹ்) அவர்கள் மர்ஹூம் அவர்களின் புகழத்தக்க பண்புகளை எடுத்துரைத்த பிறகு கூறினார்கள்:* அல்லாஹ் அவர்களுடைய அந்தஸ்துகளை உயர்த்துவானாக! அவர்களுடைய துஆக்களுக்கு அவர்களுடைய சந்ததிகளையும் வாரிசாக்குவானாக! அவர்களின் பிள்ளைகளும், அவர்களின் அன்பர்களும் அஹ்மதிய்யத் எனும் உண்மை இஸ்லாத்தைப் புரியக் கூடியவர்களாக ஆவார்களாக! அமைதி மற்றும் நிம்மதியைக் காணக்கூடியவர்களாக ஆவார்களாக! அவர்களின் பகுதிகளில் அல்லாஹ் அமைதியை நிலை பெறச் செய்வானாக! அநீதியாளனின் கையைத் தடுப்பானாக! அநீதியாளனை முடிவுக்குக் கொண்டு வருவானாக!

இஸ்ரேல் தற்போது லெபனானுடைய எல்லைப் பகுதியில் ஹிஸ்புல்லாஹ் குழுவுக்கு எதிராக பகிரங்கமாக போருக்கான ஆயத்தங்களை மேற்கொண்டுள்ளது. இதனால் சூழ்நிலை இன்னும் மோசமாக ஆகிவிடலாம். அதேபோன்று அமெரிக்காவும், பிரிட்டனும் ஏமனுடைய ஹூத்தி குழுக்களுக்கு எதிராக பகிரங்கமாக போரை ஆரம்பித்துள்ளன. இந்த அனைத்து விஷயங்களும் இந்தப் போரை இன்னும் விரிவுபடுத்துகின்றன. இப்பொழுது எழுதக்கூடிய பல பேர், இதில் உலகப் போரின் அறிகுறிகள் மிக அருகில் தென்படுகின்றன என்று எழுதி விட்டார்கள்; எழுதி வருகிறார்கள். ஆகவே, துஆக்களின் அதிக தேவை உள்ளது! அல்லாஹ் மனித குலத்திற்கு அறிவையும் புரியும் திறனையும் வழங்குவானாக!

*இதைத்தவிர, மதிப்பிற்குரிய ஹைதர் அலி ஸஃபர் சாஹிப் அவர்களின் மனைவியாகிய மர்ஹூமா அமத்துன் நசீர் ஹைதர் சாஹிபா, ஹபீபுல்லாஹ் காஹ்லோ(ன்) சாஹிப் அவர்களின் மனைவியாகிய நசீம் அக்தர் சாஹிபா மற்றும் ரஷீது அஹ்மத் ஸமீர் சாஹிப் அவர்களின் மனைவியாகிய மதிப்பிற்குரிய முபாரகா பேகம் சாஹிபா ஆகியோருடைய நற்குறிப்பை எடுத்துரைத்தார்கள். மர்ஹூம்களின் பவமன்னிப்பு மற்றும் உயர் அந்தஸ்து ஆகியவற்றிற்காக துஆ செய்தார்கள்.*

اَلْحَمْدُ لِلّٰهِ نَحْمَدُهٗ وَنَسْتَعِيْنُهٗ وَنَسْتَغْفِرُهٗ وَنُؤْمِنُ بِهٖ وَنَتَوَكَّلُ عَلَيْهِ وَنَعُوْذُ بِاللّٰهِ مِنْ شُرُوْرِ اَنْفُسِنَا وَمِنْ سَيِّئَاتِ اَعْمَالِنَا مَنْ يَّهْدِهِ اللّٰهُ فَلَا مُضِلَّ لَهٗ وَمَنْ يُّضْلِلْهُ فَلَا هَادِيَ لَهٗ وَنَشْهَدُ اَنْ لَّآ اِلٰهَ اِلَّا اللّٰهُ وَنَشْهَدُ

اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ، عِبَادَ اللّٰهِ رَحِمَكُمُ اللّٰهُ اِنَّ اللّٰهَ يَاْمُرُ بِالْعَدْلِ وَالْاِحْسَانِ وَاِيْتَآءِ ذِي الْقُرْبٰى وَيَنْهٰى عَنِ الْفَحْشَآءِ وَالْمُنْكَرِ وَالْبَغْيِ يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُوْنَ اُذْكُرُوا اللّٰهَ يَذْكُرْكُمْ وَادْعُوْهُ يَسْتَجِبْ لَكُمْ

وَلَذِكْرُ اللّٰهِ اَكْبَرُ۔

**(தமிழாக்கம்: மவ்லவி A.P.A. தாரிக் அஹமது)**